

# 3

# ரிஸாலத்தும் ஹிதாயத்தும்



இறைதூதர்கள் எனப்படுபவர்கள் அல்லாஹ்வினது வழிகாட்டலை உலகுக்கு எத்தி வைக்கும் பணியை மேற்கொண்டவர்களாவர். அவர்கள் மூலமாகவே மனித சமூகம் இறைவழிகாட்டலைப் பெற்றுக் கொண்டது. அவர்களுக்கு அல்லாஹ்வினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்கள், போதனைகள் **ரிஸாலத்** (இறைதூது) எனப்படுகின்றது. இந்த ரிஸாலத் மனிதன் நேர்வழியில் நடப்பதற்கு இன்றியமையாதது. அல்லாஹ் நாடியவர்களுக்கு மட்டுமே இதனை ஏற்று வழிபடும் மனோபக்குவம் கிடைக்கப் பெறுகிறது. இதனையே **ஹிதாயத்** எனக் கூறுவர். இதனைப் பின்வரும் ஆதாரங்கள் ஊடாக விளங்கிக்கொள்ள முடியும்.

1. மனித அறிவானது தொழில்நுட்ப வளர்ச்சியிலும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களிலும் வியத்தகு சாதனைகளை நிலைநாட்டி வருகின்றது. ஆயினும், ஒழுக்க விழுமியங்களைப் பொறுத்தவரையில் தனியாக உறுதியான வழிகாட்டல்களை வழங்கும் ஆற்றலை அது பெறவில்லை. எனவே, உயர்ந்த ஒழுக்க விழுமியங்களை அறிந்துகொள்ளவும் அவற்றைப் பேணிவரவும் இறை வழிகாட்டல் அவசியமாகின்றது. மேலும் மறைவான அம்சங்கள் பற்றிய அறிவைப் பெறவும், அவற்றின்மீது நம்பிக்கை கொள்ளவும் இறை வழிகாட்டல்கள் அவசியமாகின்றன. பின்வரும் அல்குர்ஆன் வசனம் இதனைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.



'யார் அல்லாஹ்வை இறுகப் பற்றிக் கொள்கின்றாரோ அவர் நேரான வழியை நிச்சயம் பெற்றுக்கொள்வார்.' (3:101) எனக் கூறியுள்ளது. அவ்வாறே இறைவனது வழிக்காட்டலை ஏற்காது விதண்டாவாதம் புரிபவர்களைப் பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது. அவர்களை நோக்கி 'அல்லாஹ் இறக்கிய (இவ்வேதத்)தைப் பின்பற்றுங்கள். எனக் கூறினால் அதற்கு அவர்கள், அன்று எங்கள் மூதாதைகள் எதன் மீது இருக்கக் கண்டோமோ அதனையே பின்பற்றுவோம் என்று கூறுகின்றனர். (என்னே) அவர்களது மூதாதைகளை ஷைத்தான் நரக வேதனையின் பக்கம் அழைத்து (அவர்களும் அதன்பால் சென்று) இருந்தாலுமா? (இவர்கள் அவர்களைப் பின்பற்றிச் செல்வார்கள்!)' (31:21)

2. மனிதன் படைக்கப்பட்டதன் நோக்கம் மிகச் சரியாக உணர்த்தப்பட வேண்டும். இல்லாதபோது, மனிதன் ஆசைகளுக்கு அடிமையாகி உலக வாழ்வை வீணாக்கிக் கொள்வான். மறுமையிலும் இழிவுறுவான். இந்நிலையில், அவனை விசாரிப்பதோ தண்டிப்பதோ நியாயமானதாக இருக்க மாட்டாது. எனவே, மறுமையில் அவன் தன்னைத் தண்டிப்பது நியாயமற்றது என வாதிட்டாலும் கூட அதனைப் பிழையாகக்கொள்ள முடியாது. ஆயினும், அல்லாஹ் நீதமானவன் எந்தவொரு ஆன்மாவையும் அநியாயமாகத் தண்டிக்கமாட்டான். எனவேதான், தனது தூதர்களை அனுப்பி ரிஸாலத்தின் மூலமாக மக்கள் படைக்கப்பட்ட நோக்கத்தை விளக்கி, அதனடிப்படையில் நடைபோட வழிகாட்டி யுள்ளான். 'அவர் வருகைக்கு முன்பே ஏதேனும் ஒரு வேதனையை இறக்கி அவர்களை நாம் அழித்திருந்தால், அப்போது அவர்களே கூறுவர்.. எங்கள் இறைவனே! எங்களிடம் ஒரு தூதரை நீ அனுப்பியிருக்கக் கூடாதா? அவ்வாறு அனுப்பியிருந்தால் இழிவிற்கும் கேவலத்திற்கும் நாங்கள் ஆளாகும் முன்பே உன் வசனங்களைப் பின்பற்றியிருப்போமே!' (20:134) என்ற வசனம் இறைவழிகாட்டல் வழங்கப்பட்ட பின்னரே வெகுமதியோ தண்டனையோ அல்லாஹ்வினால் வழங்கப்படும் என்பதைப் புலப்படுத்துகிறது.

3. மனித சமூகம் நேர்வழியில் நடைபோட சிறந்த முன்மாதிரி அவசியமாகும். மனித உள்ளங்களில் வெறும் பிரச்சாரம் ஏற்படுத்தும் தாக்கத்தை விட நடைமுறை முன்மாதிரி பெருந்தாக்கத்தை ஏற்படுத்தும். அவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவர்களாக இறைத்தூதர்கள் இருந்திருக்கிறார்கள். அதன் மூலம் ரிஸாலத் நேர்வழிக்கான ஊடகமாக அமைகிறது என்பதற்கு அவர்கள் சான்றாக அமைந்திருக்கிறார்கள். எனவேதான், அல்குர்ஆன் '(நபியே!) இவர்கள் அனைவரையும் அல்லாஹ் நேரான வழியில் செலுத்தினான். ஆகவே அவர்களுடைய நேரான வழியை நீங்களும் பின்பற்றுங்கள்' (6:90) என அவர்களைப் பார்த்துப் பிரஸ்தாபிக்கின்றது.

4. மனித வாழ்வுக்கு வழிகாட்டும் அனுமதி மனித அறிவுக்கு மாத்திரம் வழங்கப் பட்டிருக்குமாயின், மனித சமூகம் பல்லாயிரம் பிரிவுகளாகப் பிரிந்திருக்கும். ஒற்றுமை என்பது அசாத்தியமான ஒன்றாக மாறியிருக்கும். ரிஸாலத்தானது இந்நிலையிலிருந்து மனித சமூகத்தைப் பாதுகாக்கின்றது. அவர்கள் அனைவரும் கண்டிப்பாக ஒற்றுமைப்பட வேண்டிய இடங்களை அடையாளப்படுத்தி அவர்களை ஒற்றுமைப்படுத்தியிருக்கிறது.

மனித சமூகத்துக்கு இறைவழிகாட்டல் இன்றியமையாதது என்பதனால் இறைவன் ஆரம்பம் முதலே இறைத்தூதர்களை அனுப்பி வந்துள்ளான். ஸுஹ்புகளையும் வேதங்களையும் இறக்கியுள்ளான்.

ஒரு முஸ்லிம் இறைவனிடமிருந்து அருளப்பட்ட வேதங்கள் அனைத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதற்கு 'இவர்கள் அனைவரும் அல்லாஹ்வையும் அவனுடைய மலக்குகளையும் அவனுடைய வேதங்களையும் மற்றும் அவனுடைய தூதர்களையும் நம்புகின்றனர்.' (2:285) என்பன போன்ற வசனங்கள் சான்றாக அமைகின்றன.

வேதங்களுக்கு முன்னர் அருளப்பட்ட ஸுஹுபுகளின் எண்ணிக்கை நூற்றுப் பத்து எனக் குறிப்பிடப்படுகிறது. அவை:

- ★ ஆதம் (அலை) அவர்களுக்கு 10
- ★ ஷீத் (அலை) அவர்களுக்கு 50
- ★ இத்ரீஸ் (அலை) அவர்களுக்கு 30
- ★ இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு 10
- ★ மூஸா (அலை) அவர்களுக்கு 10 ஆகியனவாகும்.

இவற்றுள், இப்ராஹீம் (அலை), மூஸா (அலை) ஆகியோருக்கு வழங்கப்பட்ட ஸுஹுபுகளைப் பற்றி மாத்திரமே அல்குர்ஆன் பிரஸ்தாபித்துள்ளது.

இவ்வாறே,

- ★ மூஸா (அலை) அவர்களுக்கு தவ்றாத் வேதமும்,
- ★ தாவூத் (அலை) அவர்களுக்கு ஸபூர் வேதமும்,
- ★ ஈஸா (அலை) அவர்களுக்கு இன்ஜீல் வேதமும்,
- ★ முஹம்மத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு புர்கான் வேதமும் அருளப்பட்டுள்ளன.

மேற்கூறப்பட்ட அனைத்து வேதங்களும் அல்லாஹ்விடமிருந்தே அருளப்பட்டதாக நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும். அதனுடன் இறுதி வேதமாகிய அல்குர்ஆனைப் பின்பற்றுவதே நேர்வழிக்கான இறுதித் தெரிவு என்பதிலும் உறுதிகொள்ள வேண்டும்.

**பயிற்சி**

1. வேதங்கள், ஸுஹுபுகள் வழங்கப்பட்ட நபிமார்களின் பெயர்களைப் பட்டியல்படுத்துக.
2. மனித சமூகத்துக்கு நேர்வழிகாட்ட ரிஸாலத் அவசியப்படுவதற்கான நியாயங்களை எடுத்துக்காட்டுக.